பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 170

வெள்ளிக்கிழமை
16 மே 2025

வைகாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



## கொழும்பு மாநகரை கைப்பற்றுவது உறுதியே!

பிமல் தெரிவிப்பு

கொழும்பு, மே 16
கொழும்பு மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சி

11

# ராஜபக்சக்களின் குடும்பத்தினர் இனப்படுகொலையாளிகளே

## இலங்கையில் தற்போதும் மனித உரிமை மீறல்கள்!

அளவு குறையவேயில்லை என்று பிரிட்டன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 16
இலங்கையில் தற்போதும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. மனித உரிமை மீறல்களின் அளவு குறைவடையவில்லை என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் ஹரெத்தோமஸ்

11

## துாபிக்கான எதிர்ப்பால் பெருமிதம்

மேயர் பற்றிக் பிரவுண் அதிரடி!



கொழும்பு, மே 16
ராஜபக்சக்களின் குடும்பத்தால் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைகள், போல்பொட், ஸ்லோபடான் மிலோசோவிக், ஹென்றிச் ஹிம்லர் மற்றும் புளிசியான் கபுகா ஆகியோர் இழைத்த மனிதகுலத்துக்கு எதிரான மோசமான குற்றங்களுக்கு நிகரானவை - இவ்வாறு காட்டமாக விமர்சித்துள்ளார் கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண்.

11

## திஸ்ஸ விகாரைக்கு முன்னால் அடிப்படைவாதக் குழுவாம்

கொதிக்கின்றார் விமல் வீரவன்ஸ



யாழ்ப்பாணம், மே 16
யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரைக்கு முன்னால், பௌத்த விகாரைக்கு எதிராகப் போராடுபவர்கள் அடிப்படைவாதக் குழுவினர். அவர்கள் ஏன் இன்னமும் கைது செய்யப்படவில்லை? என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரசன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

11

ஊழலைத் தடுப்பதற்காக

## மாகாணசபைகளில் புலனாய்வுப் பிரிவு!

ஜனாதிபதி அநுர நடவடிக்கை

கொழும்பு, மே 16
ஊழல்களையும் மோசடிகளையும் தடுப்பதற்கு மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைச்சு மட்டத்திலான புலனாய்வுப் பிரிவுகளை ஏற்படுத்த ஜனாதிபதி அநுர அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
ஜனாதிபதிக்கும், ஆளுநர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

11

பொதுமக்களால் முறைப்பாடு வழங்கப்பட்ட

## உயரதிகாரிகள் ஏழுபேரின் பதவிகள் பறிக்கப்பட்டன!

ஆளுநர் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 16
பொதுமக்களால் தொடர்சியாக வழங்கப்பட்ட பல்வேறு முறைப்பாடுகளுக்கு அமைய, திணைக்களத் தலைவர்கள் மற்றும் சில பிரதேசசபைச் செயலாளர்

11

## வவுனியாவில் ஆட்சியமைக்க சங்கும் வீடும் புரிந்துணர்வு!



வவுனியா, மே 16
வவுனியாவில் உள்ள சபைகளில் ஆட்சியமைப்பதற்காக, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் புரிந்துணர்வின் அடிப்படையில் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்று

11

## மண்டைதீவில் வீடொன்றில் பணம், நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், மே 16
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு 6ஆம் வட்டாரப் பகுதியில், சுமார் 4 லட்சம் ரூபா பணமும், வெளிநாட்டு நாணயங்களும், நகைகளும் திருடப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பொலிஸார்

11

காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்தியில் விரிவாக ஆராய்ந்தே முடிவு

இந்திய உதவி தொடர்பில் பிரதியமைச்சர் அறிவிப்பு!

விரிவு பக்கம் :- 02

### முச்சந்தி முரளி

'இப்பிடி பதவியைப் பறிச்சாத்தான் மற்றவையும் பிழை செய்யப் பயப்பிடுவினம் கண்டியளோ'

## ரணிலின் தந்திரம் எம்மிடம் எடுபடாது

தேசிய மக்கள் சக்தி சவால்

கொழும்பு, மே 16
அரசாங்கத்துக்கு எதிராக, எதிரணிகளை ஓரணியில் திரட்டி ரணில் முன்னெடுக்கும் அரசியற் சூழ்ச்சி வெற்றியளிக்காது. ரணிலின் தந்திரங்கள் எம்மிடம்

11

## செம்மணி மயானத்தில் ஆரம்பமானது அகழ்வு!

யாழ்ப்பாணம், மே 16
யாழ்ப்பாணம்-அரியாலை சிந்துபாத்தி மயானத்தில் மனித என்புச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்ட பகுதியில் நேற்றுமுதல் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.
அகழ்வுப் பணிகளின் முதல்நாளான நேற்று நீதவானின் கண்காணிப்பின் கீழ், அளவீட்டுப் பணிகளும், வரைபடப் பணிகளும் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்து நேற்று மாலையளவில் அகழ்வுப் பணிகள்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4072 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 14 33 44 65 |
| விசேட எழுத்து | W |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1139 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 16 44 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0098 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 9 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2178 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 27 66 70 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5830 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 1 4 9 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1860 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 08 12 29 32 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0405 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 1 4 9 4 |

# உள்ளூராட்சிசபைகளில் எதிரணி இணைந்து ஆட்சி

## ரணில் தலைமையில் திட்டம்

**கொழும்பு, மே 16**

**ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத உள்ளூராட்சிசபைகளில் எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் பங்கேற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பிவிதுரு ஹெல உறுமய என்பவற்றின் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர். எதிரணிகள் ஒன்றிணைந்து சிறிய சபைகளில் ஆட்சியமைப்பதெனவும், தேசிய அரசியலிலும் கூட்டு எதிரணியாகச் செயற்படுவதெனவும் இணக்கம் காணப்பட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (எ-44)

## சாதாரணதர செயல்முறை பரீட்சைகள் இம்மாதம்

வவுனியா,மே16

2024 (2025) க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளுக்கான அழகியல் பரீட்சைகள் மே 2025 இல் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நடைமுறைப் பரீட்சைகள் மே 21 முதல் 31 வரை நாடு முழுவதும் 1,228 பரீட்சை நிலையங்களில் 171,100 பரீட்சார்த்திகளுடன் நடைபெறும்.

பரீட்சைச் சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம், பரீட்சை அனுமதி அட்டைகளை 2025 மே 19 முதல் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளமான www.doenets.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்று பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## போனஸ் ஆசனம் யாருக்கு? சங்குக் கூட்டணியில் குழப்பம்

வவுனியா, மே 16

வவுனியா மாநகரசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குக் கிடைத்துள்ள போனஸ் ஆசனம் யாருக்கு என பங்காளிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்த நிலையில், ஒரு போனஸ் ஆசனம் பெண் ஒருவரை நியமிப்பதற்குக் கிடைத்திருந்தது. இந்த போனஸ் ஆசனம் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவுக்கு என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்போது மாநகரசபையின் போனஸ் ஆசனத்தை தமக்குத் தரவேண்டும் என்று புளொட் கோரியுள்ளது. அதற்கு ரெலோ மறுப்புத் தெரிவித்துள்ளது. எனினும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் பதவி புளொட் அமைப்பிடம் உள்ளதால் அவர்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது. இதனால் ரெலோ தரப்பு குழப்ப நிலையில் உள்ளது என்றும், விரைவில் கூடி இதுதொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரியவருகிறது. இந்தக் கூட்டணிக்குள் மேயர் தெரிவு மற்றும் போனஸ் ஆசனம் தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-18)

## விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், மே 16

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியின் 65 ஆவது அகவை நிறைவையொட்டி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும், யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரிச் சமூகமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நடைபவனி நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனி யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் பொது நூலகம், ஏ-9 வீதி, முதலாம் குறுக்கு வீதி வழியாக மீண்டும் தாதியர் பயிற்சிக் கல்லூரியைச் சென்றடைந்தது. (ச-66,27)




| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0538 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 6 6 8 9 5 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2804 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 13 22 51 52 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 14 26 37 71 |
| வெற்றி வாரம் | 4965 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0682 |
| வெற்றி இலக்கம் | 21 27 49 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 02 17 26 49 |
| சீட்டிழுப்பு வாரம் | 4516 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 01 26 38 65 |
| வெற்றி வாரம் | 1980 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 15.05.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 57 62 68 74 |
| வெற்றி வாரம் | 2630 |



காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்தியில் விரிவாக ஆராய்ந்தே முடிவு

### இந்திய உதவி தொடர்பில் பிரதியமைச்சர் அறிவிப்பு!

யாழ்ப்பாணம், மே 16

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதினூடாக ஏற்படும் பலாபலன்கள் பற்றி ஆராய்ந்த பின்னரே இந்தியா வழங்கவுள்ள உதவித்தொகையை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிப்போம் எனத் துறைமுகங்கள் கப்பற் போக்குவரத்துப் பிரதியமைச்சர் ஜனிதா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கம் 62 மில்லியன் டொலரை உதவித்தொகையாக வழங்கத் தீர்மானித்திருந்தது. ஏற்கனவே ரணில் அரசாங்கத்துடன் இது தொடர்பான பேச்சுகளையும் நடத்தியிருந்தது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-25, 6)

# இவ்வாண்டில் இதுவரையில் 965 பேர் விபத்துகளில் பலி

**கொழும்பு, மே 16**

**இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் வீதி விபத்துகளினால் 965 பேர் உயிரிழந்துள்ளனர். 1,842 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

ஜனவரி 1 ஆம் திகதி முதல் மே 13 ஆம் திகதி வரை நாடு முழுவதும் இடம்பெற்ற வீதி விபத்துகளில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த காலப் பகுதியில் சாரதிகளின் கவனக்குறைவு, மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல் மற்றும் முறையற்ற வாகனப் பராமரிப்பு ஆகியவையே விபத்துகளுக்குக் காரணம் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போக்குவரத்து விபத்துகளைக் குறைப்பதற்காக நாடுமுழுவதும் விசேட வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த திட்டமிட்டுள் ளதோடு, இதனூடாக சாரதிகளுக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# சாரதிகளைக் கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு

கொழும்பு, மே 16

இலங்கையில் பஸ் சாரதிகளைக் கண்காணிக்கவும், பொதுப் போக்குவரத்தில் ஆசனப்பட்டிகளைக் கட்டாயமாக்கவும், செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் ஆண்டு தோறும் சராசரியாக 3 ஆயிரம் பேர் வீதி விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். அதையடுத்து அடுத்த ஆண்டு முதல் பஸ் சாரதி கண்காணிப்பு அமைப்புக்கள் பொருத்தப்படவுள்ளன.

அதே நேரத்தில் அடுத்த மாதம் முதல் பொதுப் போக்குவரத்தில் ஆசனப்பட்டிகள் கட்டாயமாக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சிறந்த சாரதி கலாசாரத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்புத் தரங்களை மேம்படுத்துவதற்கும் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# தாதியர்களுக்கு பல்கலைக்கழகம்

கொழும்பு, மே 16

இலங்கையில் மிக விரைவில் தாதியருக்கான பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார்.

தாதியர் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சாத்தியம், அதன் சாதக, பாதகங்கள் குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிக விரைவில் பல்கலைக்கழகம் ஒன்றைத்ஸ்தாபிக்கும்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அத்துடன் சுகாதாரநிலையை மேம்படுத்த எதிர்வரும் நாட்களில் பல்வேறு பிரதேசங்களை மையப்படுத்தி 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவவும் உத்தேசித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# இந்தியாவில் இருந்து ஊடுருவியோர் கைது

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைக்குள் நுழைந்த நால்வரும், அவர்களை அழைத்து வந்த இருவரும் என ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுத் துறையால் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவர்களை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம26)



பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில்

# தமிழ்த் தேசியப் பேரவையினர் கனேடியத் தூதுவருடச் சந்திப்பு

கொழும்பு, மே 16

தமிழர்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில், தமிழ்த் தேசியப் பேரவையினருக்கும் கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அரசாங்கத்தால் காணி சுவீகரிப்புத் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பிலும், குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலும், தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பிலும், இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரம் தொடர்பிலும் கனேடியத் தூதுவரின் கவனத்துக்குத் தமிழ்த் தேசியப் பேரவையினர் கொண்டு சென்றனர். (ம125,26)

# புதினம் தெரியுமோ?



நேற்றையான் பட்சியில மற்றப் பக்க நியாயத்தைக் கேக்கேலை எண்டு சிலர் குறைப்படுகினம். ஒருவகையில அவையின்ர குறையிலையும் நியாயம் இருக்குத்தான். முள்ளிவாய்க்கால் எண்ட உணர்வுபூர்வமான விசயத்தோட சிலர் விளையாடுகினம் எண்டதால பட்சியும் அப்பிடி உடன சொல்லிப்போட்டுது. பிறகு கொஞ்சம் ஆராய்ஞ்சதிலதான் சில விசயங்களின்ர முழுப்பக்கமும் தெரியவந்தது.

நேற்றுச் சொன்னமாதிரி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தனிய சேர்ச்சில நடத்திறதுக்கு ஆரும் முயற்சி செய்யேலை எண்டு அந்தக் கட்டமைப்பில இருக்கிற சிலர் உறுதியாச் சொல்லுகினம். அங்கத்தைச் சனமும் அப்பிடித்தான் சொல்லுகினம். அப்ப ஏன் இப்பிடி ஒரு கதை வந்தது? அதுக்கும் காரணம் இருக்கு. 2013 இல உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமையிலகூட சேர்சில பிரார்த்தனை செய்யிறமாதிரி பேய்க்காட்டி, நினைவேந்தலைச் செய்த பாதர்மார்தான் நிலைமை சுமுகமான பிறகும் நினைவேந்தலை முன்னுக்கு நிண்டு நடத்தினவை. இதுக்கெண்டு பொதுக்கட்டமைப்பு ஒண்டும் உருவாக்கினவை. அதில தனிய பாதர்மார் மட்டும் எண்டில்லாமல் எல்லா மதத்து ஆக்களும் இருக்கோனும் எண்டுதான் தென் கயிலை ஆதினத்தையும் அதுக்குள்ள சேர்த்தவை. அந்தக் கட்டமைப்புக்குள்ள கம்பஸ் பெடியளும் இருக்கினம். ஆனால் கம்பஸ் பெடியளின்ர மாணவர் ஒன்றிய நிர்வாகம் ஒவ்வொரு வருசமும் மாறுறதாலை அவையள் ஒவ்வொரு வருசமும் நடக்கிற. நினைவேந்தல் கட்டமைப்புக்குழுவின்ர பொதுக்கூட்டத்துக்குப் போய் தங்கட பெயர் விவரங்களைக் குடுக்கோனும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில பொதுச்சுடர் ஏத்துறது ஆரெண்டதையும், முள்ளிவாய்க்கால் பிரகடனத்தை ஆர் எழுதுறது, என்ன எழுதுறது, ஆர் அதை வாசிக்கிறது எண்டு எல்லாத்தையும் இந்த நினைவேந்தல் கட்டமைப்புத்தான் டிசைட் பண்றது.

ஆனால் எல்லாத்தையும் குழப்பியடிக்கிற கூட்டமொண்டு வெளிநாட்டில இருக்குது. அவையள் தாங்கள்தான் உந்த நினைவேந்தலில என்ன நடக்கோனும் எண்டதை முடிவுசெய்யோனும் எண்டு நினைக்கினம். அதுக்காக 2013 இல இருந்து தங்கட உயிரைப் பணயம் வைச்சு, நினைவேந்தலை செய்யிறவையை ஒதுக்கி தாங்கள் முன்னுக்கு நிக்கோனும் எண்டு நினைக்கிறது எவ்வளவு பெரிய பிழை? முந்திவந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைக்கிற வேலையெல்லோ. தாங்கள் வெளிநாட்டில இருக்கிறதால இஞ்சயுள்ள சிலரை அவை கொம்பு சீவி, நினைவேந்தல் கட்டமைப்புக்காரரிட்ட அனுப்பி இருக்கினம். 'நீங்கள் மட்டுமோ நினைவேந்தல் செய்யிறது? நாங்களும் சேர்ந்து செய்யப்போறம். எங்களையும் உதுக்கை சேருங்கோ' எண்டிருக்கினம். அதுக்கு கட்டமைப்புக்காரர் 'இந்தமுறை எல்லா ஏற்பாடும் செய்துபோட்டம். ஓகஸ்ட்மாதம் இந்தக் கட்டமைப்பின்ர பொதுக்கூட்டம் இருக்கு. அதில வந்து நீங்களும் சேரலாம்' எண்டு பக்குவமாச் சொல்லி அனுப்பி இருக்கினம். அதைத்தான் பாதர்மார் தாங்கள் நினைச்சபாட்டில, புறிம்பா நினைவேந்தல் செய்யப்போயினம் எண்டு கொஞ்சப்பேர் கதை பரப்புகினமாம். ஒரு நினைவேந்தலை வைச்சு எப்பிடியெல்லாம் எங்கட ஆக்கள் அரசியல் செய்யினம் எண்டு பார்த்தியளோ?

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணையால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். ஆனால், முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** சிலருக்கு உறவினர்கள்வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம்தேவை. சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். சிலருக்கு வீட்டில் தெய்வவழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது. தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டை அனுமதிக்கவேண்டாம். தாய்மாமன் வழியில் சுபச்செய்தி வரும். சகோதரவகையில் சில சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**துலாம்:** இன்று நீங்கள் தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம் :** சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாகனத்தில் செல்லும்போது கவனம்தேவை. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், சிலருக்குக் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**கும்பம்:** தந்தை வழியில் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்து ணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி கைதடியில் வழங்கிவைப்பு



யாழ்ப்பாணம், மே 16
அகில இலங்கை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு அண்மையில் கைதடிச் சந்தியில் முச்சக்கரவண்டி தரிப்பிடத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திர குமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.கஜேந்திரன், உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-22,159)

# 3 நாள்கள் சிறப்புறும் சிலப்பதிகார விழா

யாழ்ப்பாணம், மே 16
அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகார விழா எதிர்வரும் 23, 24, மற்றும் 25ஆம் திகதிகளில் 3 நிகழ்வுகளாக அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. முதலாம் நாள் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்த்தாத்தா கந்தமுருகசேனார் அரங்கில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் "எமது தேசத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் தேவையானது உயர்ந்த அறமே தெளிந்த அறவே" எனும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி. கோசலை மதன் நடுவராகப் பங்குபற்றும் விவாத அரங்கு மற்றும் "இளங்கோவடிகள் தன் காப்பியத்தினுள் பெரிதும் வலியுறுத்தும் பாவிகச் செய்தி" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் நடுவராகப் பங்குபற்றும் பட்டிமன்றம் என்பன இடம்பெறவுள்ளன.
இரண்டாம் நாள் நிகழ்வு 24ஆம் திகதி சனிக்கிழமை கலைஞர் கந்தையா வடிவேலு அரங்கில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் "பழசை மறந்த பழசுகள்" எனும் தொனிப்பொருளில் சிலம்பிசை கோ.கோகிலரதன் நடுவராகப் பங்குபற்றும் கவியரங்கு, "பாண்டியன் பாவை'' எனும் தொனிப்பொருளில் வாமதேவ சிவசதீபன் ஆற்றும் கதாப்பிரசங்கம் மற்றும் "நீதியை நிலைநாட்டி தியாகம் செய்தவர் என்ற பெருமைக்குரியவர்" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் இலக்கிய ஆணைக்குழு என்பன இடம்பெறவுள்ளன. மூன்றாம் நாள் நிகழ்வு 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமதி வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அரங்கில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சி.கிருஷ்ணாகரனின் நெறியாள்கையில் இளங்கோ கழக இளைஞர் அணியினர் வழங்கும் "தமிழ் அமுதம்" இசை விருந்து, "குற்றக்கூண்டில் சிலப்பதிகாரத் தலைவியர்" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் வழக்காடு மண்டபம் என்பன இடம்பெறவுள்ளன. (ச-41)

# வடமாகாணத்தில் வெசாக் நிகழ்வு

முல்லைத்தீவு, மே 16
வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வெசாக் நிகழ்வு, முல்லைத்தீவு வெலிஓயா மகாவலி விளையாட்டு மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதன்போது மலர்க் கொடி ஊர்வலம், தர்மபொதனை, வெசாக் கூடு கண்காட்சி, பக்தி கீதம் இசைத்தல் போன்ற பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. வெசாக் கூடு தயாரித்தல் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.
வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் உட்பட அரச ஊழியர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவாயுதம் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே.16
நினைவாயுதம் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் தடங்கள் கண்காட்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் பிரதான வளாகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகியுள்ளது.
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இறுதிநாளான நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைவரை இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. கண்காட்சியில் மாணவர்கள், பொதுமக்கள், ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்று இனப்படுகொலை வரலாற்றை எமது அடுத்த சந்ததிக்குக் கடத்த உதவவேண்டும். பிரதானமாக பாடசாலை மாணவர்களிடத்தில் எங்கள் துயரம் தோய்ந்த வரலாறு கடத்தப்படுவது அவசியமாகும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தயாபரன் லஜிதர் தெரிவித்துள்ளார். (ச-22,66)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# என்று மறையும் இந்த இனவாதம்?

கனடா, பிரம்டன் நகரில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ள நிலையில், தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் அந்தவிவகாரத்தை அரசியலாக்க முனைந்துள்ளனர். கடந்தகாலங்களில் ஆட்சி, அதிகாரத்தில் இருந்து மக்கள் ஆதரவை இழந்துள்ள தெற்கு அரசியல்வாதிகள் மக்கள் மனங்களில் இனவாதத்தை விதைத்து, மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்ற நப்பாசையுடன் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபிக்கு எதிராகக் கொந்தளிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இலங்கையின் இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அந்தப் போரில் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கான சான்றுகளும் வெளிப்பட்டிருந்தன. இலங்கை இராணுவத்தால் கொடூரமான முறையில் நடத்தப்பட்ட இறுதிப்போரில் நடைபெற்ற மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளுக்கும், பொறுப்புக்கூறலுக்கும் வலியுறுத்தப்பட்டுவருகின்றபோதும் இலங்கையின் ஆட்சியாளர்கள் அதைத் தட்டிக்கழித்து வந்திருக்கின்றார்கள். போர் முடிந்து 15 ஆண்டுகளாகியுள்ளபோதும் குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கோ, பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவோ இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்னோக்கி ஒரு அடிகூட எடுத்துவைக்கவில்லை.

இறுதிப்போரின்போது மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களோ – இன அழிப்போ நடைபெறவில்லை என்று மீண்டும் மீண்டும் 'பிலாக்கணம்' பாடும் இலங்கை அரசாங்கங்கள் அதை நிரூபிப்பதற்கு முயலவில்லை. அவ்வாறான குற்றங்கள் இடம்பெறவில்லை என்பதைத் திடமாக இலங்கை நம்புமாக இருந்தால் விசாரணைகளை ஆரம்பித்து அதை நிரூபிப்பதன் ஊடாக இந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்ளமுடியும். ஆனால் இறுதிப்போரில் என்ன நடந்தது என்று போர் நடக்கையிலும், அதன் பின்னரும் ஆட்சியில் இருந்தவர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்குச் செல்லத் தயங்குகின்றனர். இராணுவத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்படும் விசாரணைகள், தெற்கில் தங்களின் அரசியல் செல்வாக்குக்கு ஆபத்தாக மாறிவிடும் என்ற அச்சமே தெற்குத் தலைமைகளின் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற இந்த நிலைப்பாட்டுக்குப் பிரதான காரணம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே

இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால், இறுதிப்போரில் நடந்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றங்களுடன் தொடர்புடையவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவது அவசியம். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுவது முக்கியம். இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டால் மட்டுமே எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து மீண்டெழுந்து நாடு முன்னோக்கிப் பயணிக்கமுடியும். ஆனால் குறுகிய அரசியல் நோக்கங்களை முன்னிறுத்தி தெற்கு அரசியற் தலைமைகள் இவற்றைப் புறந்தள்ளிச் செயற்பட்டதால்தான் நாடு இன்னும் இன்னும் படுகுழிக்குள் தள்ளப்பட்டு, வங்குரோத்துநிலையை அடைந்து உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. கடந்தகாலப் பட்டறிவுகளால் தெற்கு அரசியற் தலைமைகளிடம் தெளிவு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை என்பதையே கனடாவில் அமைக்கப்பட்ட தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி வெளிப்படுத்தியிருக்கின்றது. தாம் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக எவ்விதமான குற்றவுணர்வும் இன்றி இனவாதத்தை விதைக்கும் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தெற்கு அரசியல்வாதிகளின் இந்தப் போக்குத் தொடரும்வரையில் இலங்கையின் முன்னேற்றம் கேள்விக் குறியாகவே இருக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

வெற்றி என்பது இறுதியானது அல்ல, தோல்வி என்பது அபாயகரமானது அல்ல, தொடர்வதற்கான தைரியம்தான் முக்கியமானது.

– வின்ஸ்டன் சேர்ச்சில் –




# உள்ளூராட்சிசபை பதவிகளுக்கு ஒருவாரத்துக்குள் பெயரிடுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, மே 16

**உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளின் பிரதான பதவிகளுக்கு பரிந்துரைக்கப்படுபவர்களின் பெயர் விவரங்களை ஒருவார காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அரசியற்கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களுக்கு அறிவித்துள்ளது.**

உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளுக்கான தேர்தல் நடைபெற்று, தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 339 உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளின் பதவிக்காலம் ஜீன் மாதம் 2ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகும்.

உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளில் பெரும்பான்மையைப்பெற்ற அரசியற்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அந்த அதிகாரசபைகளின் மேயர், துணை மேயர், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய பதவிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை ஒருவார காலத்துக்குள் சமர்ப்பிப்பது அவசியம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அரசியற்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளின் கன்னிக்கூட்டம் எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி கூடுவதற்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றங்களில் பெரும்பான்மை இல்லாதவிடத்து, ஜீன் மாதம் 2 ஆம் திகதி சபை கூடும்போது வாக்கெடுப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# மின்னல் தாக்கி ஒருவர் சாவு

அம்பாறை, மே 16

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவின் விஜயபுரப் பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என தெஹியத்தகண்டியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் விஜயபுர, தமனேவெலப் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் ஆவார். குறித்த நபர் வயலில் நெல் விதைக்கும் போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# கெஹலிய வழக்கு விசாரிப்பதற்கு நீதிபதிகள் குழாம் நியமிப்பு

கொழும்பு, மே 16

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மருந்து கொடுக்கல் – வாங்கல் தொடர்பான வழக்குக்கு மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் பிரதம நீதியரசரிடம் விடுத்த வேண்டுகோளைப் பரிசீலித்து நீதிபதிகள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது. தரமற்ற ஹியூமன் இம்யூனோ குளோபியுலின் தடுப்பூசியைக் கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தியமை மற்றும் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்ததாக முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ரூபா உயர்வு



கொழும்பு, மே 16

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. இலங்கை மத்தியவங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்றுவீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 294 ரூபா 69 சதமாக பதிவாகியுள்ளது. அத்துடன் விற்பனை விலை 303 ரூபா 05 சதமாக பதிவாகியுள்ளது. (ச-இ)

# பஸ்கள் இறக்குமதிக்கு இனி நிபந்தனைகள்

அடுத்த ஆண்டுமுதல் பொதுப் போக்குவரத்துக்காக பஸ்களை இறக்குமதிசெய்யும் போது பல நிபந்தனைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான மற்றும் நவீனமான பேருந்துகளை மட்டுமே இறக்குமதிசெய்ய அனுமதி வழங்கப்படும். வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளின்கீழ் இயங்குகின்றனவா? என்பதை ஆராயும் பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## நாளை

சனிக்கிழமை- வைகாசி 02

17.05.2025

சுபநேரம் : 05.53-07.23

ராகுகாலம் : 10.23 - 11.53

## விபத்துகளைத் தடுப்பதற்கு கடும் சட்டங்கள் விரைவில்

கொழும்பு, மே 16

வீதி விபத்துகளைக் குறைக்க கடுமையான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கொத்மலை பஸ் விபத்துகள் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் பெறப்படும்.

குறித்த அறிக்கையை ஆய்வுசெய்த பிறகு, இது போன்ற விபத்துகளைத் தடுக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# குடிதண்ணீருக்கு அல்லாடும் கிளாலிக் கிராம பொதுமக்கள்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



கிளிநொச்சி, மே 16

**பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிளாலி கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்கள் நீண்டகால மாக குடிதண்ணீர் நெருக்கடியைச் சந்தித்துவருகின்றனர்.**

அங்குள்ள பெரும்பாலான கிணறுகள் உவர்நீரைக் கொண்டவையாகவும், கடும்காவி நிற நீரைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. குடிதண்ணீர் தேவைக்குப் பயன்படுத்தமுடியாத அந்த நீரை மக்கள் வேறுவழியின்றி இதர தேவைகளுக்குப் பயன்படுத்திவருகின்றனர். காவி நிறத்தில் காணப்படும் இந்த நீரில் ஆடைகள் கழுவினால், அந்த ஆடைகள் நிறம்மாறி அழுக்கு ஆடைகள் போன்று காணப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். அங்குள்ள ஒரு சிலரின் கிணறுகளில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெறப்படும் நீரும், பிரதேச சபையால் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகள் ஊடாக வழங்கப்படும் நீரும், குடிதண்ணீர் தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லை என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மூலம் வழங்கப்படும் குடிதண் ணீரை விரைவுபடுத்த வழங்கவேண்டும் என்றும், ஏனைய கிராமங்களில் வழங்கப்பட்டதைப்போன்று தமக்கும் இலவச நீர் இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-214,113)



## கிறிஸ்டி குகராஜாவின் 26ஆவது நினைவுதினம்

வவுனியா,மே16

தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட பொறுப்பாளராக இருந்து படுகொலைசெய்யப்பட்ட கிறிஸ்டி குகராஜாவின் 26ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடத்திற்கு முன்பாக குறித்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டு அன்னாரது படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலிசெலுத்தினார். நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-33-110)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 16

நீர்வேலி சுப்பிரமணியம் சனசமூக நிலையத்தினால் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நீர்வேலிப்பகுதியைச் சேர்ந்த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் சனசமூக நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-41)

## தடைகளை உடைத்தெறிந்து தப்பிய டிப்பர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 16

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் பொலிஸாரின் வாகனப்போக்குவரத்துத் தடைகளை உடைத்துக்கொண்டு தப்பிச்சென்றநிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொலிஸ் உபபரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் துரத்திச்சென்று மடக்கிப்பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. கண்டாவளைப் பிரதேசத்தில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த டிப்பரை எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்து மறித்தபோது சாரதி டிப்பரை நிறுத்தாமல் சென்றுள்ளார். குறித்த டிப்பரைப் பின்தொடர்ந்து துரத்திச்சென்ற பொலிஸார் கனகம்புளியடிச் சந்தியில் வைத்து மடக்கிப்பிடித்துள்ளனர்.

இதன்போது டிப்பரின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-25,28)

## நேரடி ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும்!

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

மூன்றாம் நபர் தலையீடின்றி உற்பத்தியாளர்களே நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய சூழலை நாம் ஏற்படுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் அனைத்து வளங்களும் இருக்கின்றன. ஆனால் அதை உரியமுறையில் பயன்படுத்தவில்லை. வடக்கிலிருந்து சிலர் ஏற்றுமதிகளில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலானோர் மூன்றாம் தரப்பு ஊடாகவே ஏற்றுமதிகளை முன்னெடுக்கின்றனர். அவர்கள் நேரடியாக ஏற்றுமதியை முன்னெடுக்கக்கூடிய சூழலை உருவாக்கவேண்டும். ஏற்றுமதியுடன் தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைந்து இதனைச் செயற்படுத்தவேண்டும் - என்றார். கலந்துரையாடலில், ஏற்றுமதிக்கான சில பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கான வளங்கள் கொழும்பில் மாத்திரம் உள்ளமையால், அத்தகைய பரிசோதனைகள் யாழ்ப்பாண அல்லது வவுனியாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அத்துடன் ஒரு மாத காலத்தினுள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய திணைக்களங்களை ஒருங்கிணைத்து அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் முடிவு எட்டப்பட்டது. (ச-41-27-66)



## பிரதிப்பரீட்சைகள் ஆணையாளராக கு.விக்கினரூபன் பதவியுயர்வு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குகதாசன் விக்கினரூபன் (இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் 1) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின், பிரதிப் பரீட்சைகள் ஆணையாளராகப் பதவியுயர்வுடன் நிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞானபீட பழையமாணவரான இவர் 2012 ஆம் ஆண்டு இலங்கைக் கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைமூலம் தெரிவாகியிருந்தார். துணுக்காய், வலிகாமம் கல்வி வலயங்களிலும், வட மாகாணக்கல்வி அமைச்சிலும் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும், வட மாகாண மும்மொழிக் கற்கை நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றிய அனுபவமுள்ள கல்வி நிர்வாகியாவார். தற்சமயம் முல்லைத்தீவு கல்விவலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக்கொண்டிருந்தநிலையில், பிரதிப் பரீட்சைகள் ஆணையாளராக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ச-25)



மூளாய்வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகருடைய பூங்காவனத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை வெகு விமர்சையாக நடைபெற்றது. (ச-25)



யாழ். பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடுசெய்த முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு மன்னார் நகர பேருந்து நிலையப் பகுதியில் நேற்றையதினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

(ச-41-56)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

1 சதுர அடி - 75 ரூபா

நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்

தொடர்புகளுக்கு:

**077 334 1281**


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 09 . 1989

மறைவு 22 . 05 . 2019



**அமரர் ஜெகதீஸ்வரன் உமேஸ்**

(Web Designer, Network Technician & Mars Computer center owner)

**திதி : 16.05.2025**

சூரியனாய் மலர்ந்து எம்மை
மகிழ்வூட்டிய எம் செல்வமே
திடீரென வாந்தி எடுத்தாய்
வைத்தியசாலை சென்று சேருமுன்னே
உன் மூச்சை நிறுத்தி எம்மை
என்றென்றும் உன் நினைவாகவே
வாழ விட்டு சென்றாயே எம் செல்வமே
பெற்றோர்க்கு தீ மூட்டும் பிள்ளை
ஆகிய உனக்கு தீ வைக்க வைத்தாயே!
நாம் உள்ளவரை உன் நினைவு
என்றென்றும் எம் இதயத்தில்
தீப ஒளியாய் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்

**உமேஸ் ஞாபகார்த்த பொது மண்டபம்**
**கொல்லன் கலட்டி**
**தெல்லிப்பளை**

**பெற்றோர்**
**திரு&திருமதி ஜெகதீஸ்வரன்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 05 . 1951

மறைவு 13 . 05 . 2025



### கிருஷ்ணபிள்ளை தவமணி

புதிய செம்மணி வீதி, ஞானவைரவர் கோவிலடி கல்வியங்காட்டினைப் பிறப்பிடமாகவும் பலாலி தெற்கு வசாவிளான் வரப்புலத்தினை வசிப்பிடமாகவும் தற்போது சூனசயப்பர் கோவில் வீதி அச்சுவேலியினை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை தவமணி அவர்கள் கடந்த (13.05.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு-முத்தி தம்பதியரின் மருமகளும், கார்த்திகேசு கிருஸ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் சிவகுமார் (இத்தாலி), மகேந்திரன் (சுவிஸ்), ஆனந்தராசா (டென்மார்க்), அமுதராசா (சுவிஸ்), சிறீகாந்தன், மாதினி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பகவதி, செல்வரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லட்சுமி, கந்கையா, சுசிலாதேவி (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லர், இராஜசிங்கம், நாகமுத்து, மாணிக்கம், இரத்தினம், இராசம்மா, சின்னராசா ஆகியோரின் மைத்துனியும் ராசாத்தி (இத்தாலி), விஜயமாலா (சுவிஸ்), வசந்தி (டென்மார்க்), தனுஜா (சுவிஸ்). ரூபன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் மிரேஷ், அபர்ணா, திவ்யா, ஆரிஷ், பார்த்திவ், அக்ஷி, ரவிசன், ரக்சன், யதுர்சன், அஸ்மியா, அபிசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை முற்கல் 10.00 மணியளவில் அச்சுவேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தீர்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 02 . 1950

மறைவு 15 . 05 . 2025



### செல்லத்துரை மங்களேஸ்வரி

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், இல 773/50, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மங்களேஸ்வரி நேற்று (15.05.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - மரியம்மா தம்பதியரின் மகளும், செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாரத்தன் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், நிக்ஷன், தனுஷா, மோகனதாஸ், மறினா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெனிற்றா, சணா, சிந்துஜா, வரதன் ஆகியோரின் மாமியாரும், பிரவின், சஜிந், சந்தோஷ், சானுயன், டுஷானி, மது, சியோனி, பொம்மி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், தனேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராஜேஸ்வரி, குணேஸ்வரி, தனேந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கலமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 773/50, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

*CS/58258) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1947

மறைவு 14 . 05 . 2025



### திரு. குருநாதர் பாலகிருஸ்ணன்

உரும்பிராயை பிறப்பிடமாகவும், குரு வீதி காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், கொண்ட திரு. குருநாதர் பாலகிருஸ்ணன் அவர்கள் (14.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற குருநாதர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலம் சென்ற வல்லிபுரம் - தங்கச்சியம்மா தம்பதியரின் மருமகனும் ஆவார். கௌரிநாயகியின் அன்பு கணவரும், கார்த்திகாவின் (பிரதி அதிபர், யா/ யூனியன் கல்லூரி) அன்பு தந்தையும், செந்தில்குமரனின் (அதிபர், மு/ கல்விளான் குளம் ம.வி) அன்பு மாமனாரும், மிதுர்ஜன், யதூசன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலம் சென்றவர்களான தவபத்மாதேவி, பூரணச்சந்திரன், மீனாட்சியம்மா, அருச்சுனராஜா, குணக்கொடி, பவளக்கொடி, இந்திரகுமார், கிருஸ்ணமூர்த்தி மற்றும் சந்திராதேவி, இலவககுமார், பூமாதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலம் சென்ற முத்துப்பிள்ளை, மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு (கீரி மலை வீதி மாவிட்டபுரம்) எடுத்து செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குரு வீதி**
**காங்கேசன்துறை**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 401 0510**

(CR 45004) D"

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையற்றும்
நடராசா மயூரன் அவர்களின்
அன்பு தந்தை

**அப்பாபிள்ளை நடராசா**

அவர்கள் காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்...

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா லைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**



சுகாதார மருத்துவ அதிகாரி டிரோனி தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பரந்தன் நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ச-25,113)

## INVITATION FOR BID 2025/04
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village pannai Jaffna. (T.P:0212222278, Fax: 0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | | From 16.05.2025 until 29.05.2025 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 2.30 P.M on 23.05.2025 | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 30.05.2025 | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2025/REC/W/02 | Water Supply Works for RDHS Office, Jaffna New Building (Sump, Tank and Septic Tank) | 1.60 | 76 Days | C9 or above (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/REC/W/04 | Modification Works of Public Health Unit at RDHS Office, Jaffna. | 0.86 | 67 Days | C9 or above (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/REC/W/11 | Construction of Water Tank at Divisional Hospital, Pungudutivu | 2.24 | 81 Days | C8 or above (Buildings) | 3,000.00 | 22,500.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/REC/W/12 | Improvement Work at BME Unit, Health Village, Pannai | 0.77 | 64Days | C9 or above (Buildings) | 1,500.00 | 8,000.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/PSDG/W/06 | Renovation of Hospital Building at PMCU Kokuvil | 1.69 | 76 Days | C9 or above (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/PSDG/W/07 | Repairing Work for OPD Block at DH Valvettithurai | 1.01 | 70Days | C9 or above (Buildings) | 1,500.00 | 11,500.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/PSDG/W/08 | Construction of Water Sump at DH Mandaitivu | 1.33 | 73Days | C9 or above (Buildings) | 1,500.00 | 13,500.00 | Till 14.08.2025 |
| NP/04/41/2025/CBG/W/01 | Improvements to Nainativu Hospital Approach Road (105m) | 8.06 | 91Days | C7 or above (Highway) | 3,000.00 | 87,000.00 | Till 11.09.2025 |
| NP/04/41/2025/CBG/W/02 | Renovation of Consultant Quarters at Base Hospital, Pointpedro | 1.65 | 76Days | C9 or above (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 14.08.2025 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

(CR/45002)J-1

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 05 . 09 . 1972



இறப்பு 10 . 05 . 2025

எமது பாடசாலையின் பழைய மாணவனும், நலன் விரும்பியுமான
திரு **ஆ. கிரிதரன்** அவர்களின் பாசமிகு துணைவி

**அமரர் கிரிதரன் தேன்மொழி (ஆசிரியர்)**

அவர்கள் (10.05.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(CS/3171) J-1

அதிபர், ஆசிரியர்கள்
யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 08 . 1958



மறைவு 15 . 05 . 2025

**திருமதி நடராஜா சுகஞ்ஞபாமா**

தவசிக்குளம், மிருசுவிலை பிறப்பிடமாகவும் 54, ஜயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா சுகஞ்ஞபாமா அவர்கள் நேற்று (15.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம்-சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்ற இரத்தினம்-முத்தம்மா தம்பதியரின் மருமகளும், நடராஜாவின் அன்பு மனைவியும், ராகுலன் (பிரதேச செயலகம்-மருதங்கேணி), ரமேஸ் (லண்டன்), காந்தரூபன், மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்சினி, சுகந்தி (லண்டன்), துசிவந்தி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வினுஜன், பிருத்திஸ்கா, அபிஷேக், மதுஜன், பிரனாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சத்தியபாமா, சிவனேஸ்வரி, நகுலபாமா, விஜிதபாமா, வேல்விழி, வேலழகி, அபிராமி, வேல்ரூபன் ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 471 2023**

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
29 . 03 . 1953



மறைவு
18 . 04 . 2025

கடந்த 18.04.2025 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சொக்கலிங்கம் தவராசா

(ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர் RDD)
Retired Executive Engineer at Road Development Department
New Way Marketing (Pvt)Ltd நிறுவுநர்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளைமறுதினம் (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் தாமரைக்குளத்தடி அந்தியேட்டி மடத்தில் (கல்லூரிவீதி, பருத்தித்துறை) நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் வெளிநாடுகளிலிருந்து தொலை பேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம் துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இந்நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

"உடையார் வாசா",
ஐயனார் கலட்டி, பருத்தித்துறை. (CR/45001) J-1 குடும்பத்தினர்

### சட்டவிரோத மீன்பிடி

# ஏப்ரல் மாதத்தில் 38 பேர் கைது

கொழும்பு, மே 16



ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் ஏப்ரல் 28 ஆம் திகதி வரை இலங்கைக் கடற்படையினர் கடற்றொழில் பரிசோதகர்களுடன் இணைந்து, மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக மீன்பிடித்த 38 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கந்தக்காடு, புதுமாத்தலன், திருகோணமலை, கொக்கிளாய், செபல் தீவு, உள்ளிட்ட கடற்பரப்பை அண்மித்த இடங்களில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களையும் கைப்பற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக அந்தந்த இடங்களிலுள்ள மீன்வள ஆய்வாளர் அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-25,125)

# நீங்கா நினைவுகளில்

16ஆம் ஆண்டு | 33ஆம் ஆண்டு

மலர்வு 25.04.1984



உதிர்வு 16.05.2009

கதிர்காமவேலன் ஹரிதாஸ்

மலர்வு 11.03.1972



உதிர்வு 28.08.1992

கதிர்காமவேலன் சிறிகாந்தன்

நீங்கள் எமைப் பிரிந்து ஆண்டுகள்
கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் என்றும் உயிர்ப்பாய் நிலைத்திருக்கும்.
காலங்கள் கரைந்தாலும் ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும் எம்
கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்.

மீசாலை வடக்கு
வேம்பிராய் (CS 45003) J-1

என்றும் உங்கள் பிரிவுத்துயரால் வாடும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 10 . 1958



மறைவு
15 . 05 . 2025

## செல்லத்துரை கலாவதி

நாகநாதன் வீதி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் (மாதா கோவில்) வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கலாவதி அவர்கள் நேற்று (15.05.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இளையம்மா தம்பதியரின் அன்பு மகளும், நாகபூவதி, பவளராணி காலஞ்சென்ற தியாகராசா மற்றும் செல்வராசா, விஜயநிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 979 1489
077 128 1443

(CS 58257) E-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1943



மறைவு
15 . 05 . 2025

## துரைசிங்கம் சரவணபவாநந்தன் (செல்லப்பா)

யாழ் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் சரவணபவாநந்தன் அவர்கள் நேற்று (15.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சித்திரா, சுபத்திரா, நிர்மலா, சிறீதரன், குணசேகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணமலர், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் அருளானந்தம், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் வனஜா, தயா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மகிந்தன் மற்றும் மைதிலி,மாலதி, மாறன், அனுஜா, பானுஜா, ஹரன், சுஜாதா, சநாதநி, கார்த்திகாஜினி, சாஜிகா, நிரோஷ், மீரா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 8.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல: 46/5, கருவப்புலம் ஒழுங்கை,
4ம் உப ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (CS/58255) J-1

தகவல் :
குடும்பத்தினர்



# உச்சநீதிமன்றில் பிள்ளையான் அடிப்படை உரிமைமீறல் மனு!

கொழும்பு, மே 16
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் உச்ச நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு வைத் தாக்கல் செய்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில், பிள்ளையான் கைதுசெய்யப் பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மறியலில் வைக்கப்பட்டுள்ளார். எனினும், தன்னை இவ்வாறு தடுத்து வைத்திருப்பது மனித உரிமை மீறல் என்று குறிப்பிட்டே அவர் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் பிள்ளையா னுக்குத் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகின் றது. ஆதலால், பிள்ளையான் விசாரிக்கப் படும்போது ஏதேனும் புதிய விடயங்கள் வெளிவரலாம் என்று அரசாங்கம் கூறியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# முள்ளியவளையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

முல்லைத்தீவு, மே 16
இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முள்ளியவளை மேற்கு வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில், முள்ளி ய வளைப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வன்னிமாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங் கேற்றிருந்தார்.

இதன்போது முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கு சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலிசெலுத் தப்பட்டது. அதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (ச-246)







முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தலும் கஞ்சி வழங் கல் நிகழ்வும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளையினரின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டன. நெல்லியடி பேருந்து நிலையத்தில் வைத்து முள்ளிவாய்க் கால் கஞ்சி காய்ச்சி சுடர் ஏற்றி அஞ்சலிசெலுத்தப்பட்டு நினைவேந்தல் முன் னெடுக்கப்பட்டது. இதன்போது பொதுமக்களுக்கு முள்ளிவாய்க் கால் கஞ்சி வழங்கப்பட்டது (ச-100)

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் துரைலிங்கம்

(இளைப்பாறிய பொறியியலாளர்-கட்டிடத் திணைக்களம், முன்னாள் உறுப்பினர் வலிகாமம் மேற்கு பிரதேச சபை)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் துரைலிங்கம் அவர்கள் நேற்று (15.05.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சு.மதியாபரணம் மற்றும் அ.கமலாதேவி, த.அமுதலிங்கம், த.முத்துலிங்கம், கு.செல்வமலர் ஆகியோரின் சகோதரரும் வசந்தமலரின் (ராணி) அன்புக் கணவரும் து.அருள்லிங்கம் (சுகந்தா கட்டிட ஒப்பந்தகாரர்), அ.தாரணி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை-யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற து.தயாலிங்கம் மற்றும் து.சுகந்தலிங்கம் (பொறியியலாளர் நீர்ப்பாசன திணைக்களம்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் அ.தயாளினி (ஆசிரியர், முன்பள்ளி மாதர்சங்கம்-சித்தங்கேணி), ப.அஜித்குமார் (ஆணையாளர், சாரணர் தலைமைக் காரியாலயம், வரி உத்தியோகத்தர் -மாநகரசபை யாழ்ப்பாணம்), சு.ஹம்சாயினி (ஆசிரியர், இராமநாதன் மகளிர் கல்லூரி-பம்பலப்பிட்டி) ஆகியோரின் மாமனாரும் சு.ஜதுஷன், சு.மாதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆ.விவேகானந்தன் (நோர்வே), ஆ.சிவானந்தன் (லண்டன்), ஆ.முருகானந்தன் (நோர்வே), க.மங்கையர்க்கரசி (நோர்வே), செ.திலகவதியார் ஆகியோரின் மைத்துனரும் அவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
27.06.1950

மறைவு
15.05.2025

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்

# அதிரடிப்படையின் வாகனம் மோதி அப்பாவிப் பொதுமகன் பலி

## ஓமந்தையில் துயரம்



வவுனியா ஓமந்தைப் பகுதியில் விசேட அதிரடிப்படையின் வாகனமும், மோட்டார்சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளார். கண்ணதாசன் திவியன் (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில், மற்றைய நபர் காயங்களுடன் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை ஓமந்தை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-110)



உதயன் குழுமத்தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கும், தெரன ஊடக நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான திலித் ஜெயவீரவுக்கும் இடையிலான சந்திப்பு, நேற்று மாலை கொழும்பில் அமைந்துள்ள தெரன ஊடக நிறுவனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது. (ம-125)

## கொழும்பு...

யமைக்கும். இது உறுதி என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நேற்றுத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு நாம் தயார் இல்லை. மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தற்போது ஒன்றிணைந்துள்ளனர். ஆனால், அதைப்பற்றி எமக்குக் கவலையில்லை. மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் 267 சபைகளிலும் நாம் ஆட்சி அமைப்போம். தேசிய மக்கள் சக்தி வேட்பாளரே கொழும்பு மேயர் என்பதை குறித்து வைத்துக் கொள்ளுங்கள் - என்றார். (அ-ம-44)

## இலங்கையில்...

விமர்சித்துள்ளார். பிரிட்டன் பாராளுமன்றத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். 'போர்க் குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதித்ததுடன் பிரிட்டனின் கடமை முடியவில்லை. பிரிட்டன் இன்னும் அதிக பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது' என்றும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரெத்தோமஸ் மேலும் தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் மக்டோனா, 'பிரிட்டனில் உள்ள தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் நாங்கள் துணையாக உள்ளோம். இலங்கையின் விடயத்தில் பிரிட்டன் தனது கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.
பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்களான நெய்ல் ஹட்சன், ஸ்டீபன் டைம்ஸ் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-ம-இ)

## திஸ்ஸ...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ விகாரைக்கு முன்பாக இடம்பெறும் போராட்டங்கள் பௌத்த தர்மம் மீதான தாக்குதல்களாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பௌத்த சாசனம்மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் உச்சகட்டமாக வெசாக் போயா தினத்தன்று யாழ். திஸ்ஸ விகாரைக்கு முன்னால் மத அடிப்படைவாதக் குழு அடாவடியில் ஈடுபட்டுள்ளது.
வழிபாட்டுக்குச் சென்ற பௌத்தர்கள் உள்ளேசெல்வதைதடுத்துநிறுத்தியுள்ளனர். பொலிஸார் இருந்தும் அவர்கள் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டனர். அதாவது அடிப்படைவாதிகளுக்கு தற்போது புத்துயிர் வந்துள்ளது. இந்த அரசாங்கம் தமக்கு எதையும் செய்யாது என்ற துணிவில் அடிப்படைவாதிகள் செயற்பட ஆரம்பித்துள்ளனர் - என்றார். (அ-ம-44)

## வவுனியாவில்...

நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வவுனியாவில் உள்ள உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணிக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போது எமக்கிடையே புரிந்துணர்வின் அடிப்படையில் சில உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.
அதாவது, சபைகளில் அதிக வாக்குகளைப் பெற்றுள்ள தரப்பு ஆட்சியமைப்பதற்காக மற்றைய தரப்பினர் ஒத்துழைப்பை வழங்குவது என்றுதீர்மானித்துள்ளோம். இதன்படி, வவுனியா மாநகரசபையில் சங்குக் கூட்டணி ஆட்சியமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி முழுமையான ஆதரவை வழங்கும். அதேபோல் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, செட்டிகுளம் பிரதேசசபைகளில் தமிழரசுக்கட்சி கூடிய ஆசனங்களை பெற்றுள்ளமையால் அங்கு தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கும். இதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவை வழங்கும். சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்டவர்களின் ஆதரவைப் பெறுவதற்கும் நாங்கள் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-ம-110)

## ரணிலின்...

எடுபடாது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.
தேசிய மக்கள் சக்தி அறுதிப்பெரும்பான்மைப் பலத்தை பெறாத உள்ளூராட்சி சபைகளில், எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே, சந்தன சூரியாராச்சி எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்தி 267 சபைகளில் வெற்றிபெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியால் 15 வரையான சபைகளிலேயே வெற்றிபெற முடிந்துள்ளது. அந்த சபைகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு சமாந்தரமான ஆசனங்கள் உள்ளன.
எனவே, தேசிய மக்கள் சக்தி வென்றுள்ள சபைகளில் நாம் ஆட்சியமைப்போம். எதிரணிகளை மக்கள் தோற்கடித்துள்ளனர். எனவே, எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க முற்படுவது மக்கள் விரோதச் செயலாகும். ஆதலால், மக்கள் ஆணையை நாம் நிச்சயம் பாதுகாப்போம். எதிரணிகள் இன்று வங்குரோத்தடைந்துள்ளன. ரணில் தலைமையில் எதிரணிகள் முன்னெடுக்கும் முயற்சி கைகூடாது. நாட்டுக்காக முன்னிலையாகும் சுயாதீன நபர்கள் எமக்கான ஆதரவை வெளிப்படுத்தலாம் - என்றார். (அ-ம-44)

## ராஜபக்சக்களின்...

பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள, தமிழர் இனப்படுகொலை நினைவாலயத்துக்கு நாமல் ராஜபக்ச கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலடியாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்குக் கிடைத்த கௌரவமாகும். தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபிக்கான ராஜபக்ச குடும்பத்தின் எதிர்ப்பு, அந்த குடும்பத்தின் கரங்களால் அப்பாவிகள் கொல்லப்பட்டதை அங்கீகரிக்கும் சரியான பாதையில் நாம் சென்றுகொண்டிருக்கின்றோம் என்பதற்கான உறுதியான சமிக்ஞை.
ராஜபக்ச குடும்பம் இனப்படுகொலை இடம்பெறவில்லை என உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால், நீதிமன்ற விசாரணைகளில் இருந்து தப்பியோடாமல் சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஆனால், அந்தக் குடும்பம் அரச பாதுகாப்பிலும், ஆடம்பரத்திலும் மறைந்துள்ளது. இது வெட்கக்கேடான விடயம்.
ராஜபக்ச குடும்பம் இழைத்துள்ள மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போல் பொட், ஸ்லோபடான் மிலோசோவிக், ஹென்றிச் ஹிம்லர் மற்றும் புளிசியான் கபுகா ஆகியோர் இழைத்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுடன் போட்டியிடும் அளவிற்கு மோசமானவை. ஆதலால், கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்குக் கிடைத்த கௌரவமாகும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## உயரதிகாரிகள்...

களின் பதவிகள் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் பறிக்கப்பட்டுள்ளன. இதன்படி, வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரின் பதவி உடன்நடைமுறைக்கு வரும் வகையில் திரும்பப் பெறப்பட்டுள்ளது. அத்துடன், இரண்டு மாவட்டங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், ஒரு நகரசபைச் செயலாளர் மற்றும் மூன்று பிரதேசசபைச் செயலாளர்கள் ஆகியோரின் பதவிகள் திரும்பப் பெறப்பட்டு, அவர்கள் வேறு திணைக்களங்களுக்கு உடன்நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளனர்.
அவர்களில் சிலருக்கு எதிராக விசாரணை ஆணைக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றனது. (அ-ம-26)

## மாகாண...

இதன்போதே, ஜனாதிபதியால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், மாகாணங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் அவை தொடர்பிலான சவால்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதுடன், அவற்றுக்கு ஜனாதிபதியால் தீர்வுகளும் வழங்கப்பட்டன.
கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை விட மூன்று மடங்கு நிதி மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டு மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து ஆளுநர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-இ)

## செம்மணி...

ஆரம்பிக்கப்பட்டன. இரவு 8 மணியளவில், அதாவது முதல்நாள் அகழ்வு முடிவுறுத்தப்படும்போது, என்புச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்ட பகுதியின் மேற்பரப்பு மண் அகற்றப்பட்டிருந்தது. இரண்டாம் நாளான இன்று தொடர்ச்சியான அகழ்வுப்பணிகள் இடம்பெறவுள்ளன.

**பின்னணி**

அரியாலை - செம்மணி சிந்துபாத்தி மயானத்தில், கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித என்புச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டு அமைய, விடயத்தை பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்கள். இதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சம்பவ இடத்தில் நீதிவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாகவே அங்கு அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## மண்டைதீவில்...

ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-27)

# மஹிந்தவைக் குற்றமற்றவராக நிரூபிப்பதற்கு தர்ம யுத்தமாம்!

## நாமலே தளபதி என்கிறது பெரமுன

கொழும்பு, மே 16

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதை நிரூபித்து, அவரைக் குற்றமற்றவர் ஆக்குவதற்கான தர்ம யுத்தத்தை ஸ்ரீலங்கா பொதுஜனக் பெரமுனக் கட்சி ஆரம்பித்துள்ளது. இந்த தர்ம யுத்தத்தில் நாமல் ராஜபக்சவே தளபதியாகச் செயற்படுவார்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சட்டத்தரணிகள் குழு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களின் பணத்தை ராஜபக்சக்கள் உகண்டாவில் பதுக்கிவைத்துள்ளனர், அவர்களுக்கு டுபாயில் ஹோட்டல்கள் உள்ளன, தங்கக் குதிரை உள்ளது என்றெல்லாம் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, உண்மையைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று மொட்டுக்கட்சியின் சட்டத்தரணிகள் குழு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்தது. சட்டத்தரணிகளுடன் மொட்டுக்கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவரும் சென்றிருந்தார்.

முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அரசியல் செயற்பட்டாளர் தெரிவித்ததாவது

ராஜபக்சவின் ஆட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் வைராக்கியம் விதைக்கப்பட்டது. போர் முடிந்த நாளில் இருந்து தான் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக தமிழ் மக்களின் தங்கங்களை ராஜபக்சக்கள் கன்டேனர்களில் கொண்டுசென்றனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால் அரசாங்கம் பொறுப்பேற்ற தங்கம், அண்மையில் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் ராஜபக்சக்கள் எடுத்தனர் என்ற பொய் 15 ஆண்டுகளாக நிலவியது. இதனால் எமது கட்சிக்கு ஏற்பட்ட இழப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல. மக்களை ஏமாற்றியது யார்? மக்கள் பணத்தை உகண்டாவில் அல்ல உள்நாட்டு வங்கியில் பதுக்கிவைத்திருந்தால் கூட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒன்று குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவேண்டும். இல்லையேல் போலி குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ராஜபக்சக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால் தான் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசாங்கத்துக்கு வாக்குகள் குறைந்தன. மஹிந்த ராஜபக்ச குற்றமற்றவர் என்பதை நிரூபிப் பதற்கான சமரை ஆரம்பிக்க மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். இது தர்ம யுத்தம். நாம் வீடுகளைக் கொளுத்த மாட்டோம். அரசியல்வாதிகளைக் கொல்ல மாட்டோம். இந்த தர்ம யுத்தத்துக்கு நாமல் ராஜபக்ச தளபதி தலைமைத்துவம் வழங்குவார் - என்றார். (எ-44)


### பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுவேலைகளை செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் தங்குமிட, உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 774 3185

### வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிறுவனத்துக்கு கீழ் குறிக்கப்பட்டவர்கள் உடன் தேவை

1) விற்பனையாளர் (ஆண் / பெண்)
2) சிட்டை எழுதுநர் (ஆண் / பெண்)
3) பைக்கிங் செய்பவர் (ஆண் / பெண்)
4) காசாளர் (ஆண் / பெண்)

தொடர்புக்கு:- 076 028 9835




எரிபொருள் பவுசர் விபத்து;

## 13,000 லீற்றர் எரிபொருள் இழப்பு

கொழும்பு, மே 16

கொழும்பிலிருந்து வெலிமடை நோக்கிப் பயணித்த எரிபொருள் பவுசர் ஒன்று ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதி, நானுஓயா ரதெல்ல சுற்றுவீதியில் நேற்றுமுன்தினம் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் ஏற்பட்ட எரிபொருள் கசிவு காரணமாக சுமார் 13 ஆயிரம் லீற்றர் இழப்பு ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பவுசர்மூலம் கொண்டுசெல்லப்பட்ட எரிபொருள் கசிந்தநிலையில் உள்ளூர் வாசிகள் அதை எடுத்துச் சென்றுள்ளனர். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 05 . 1946



மறைவு 15 . 05 . 2025

### இராசா செல்வநாயகம்

(சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க ஓய்வு பெற்ற முகாமையாளர்)

காளிகோயிலடி குப்பிளான் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசா செல்வநாயகம் அவர்கள் (15.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற இராசா - மாணிக்கம் தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இரத்தினம் - புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சரஸ்வதி, மகேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற இராயேஸ்வரியின் மைத்துனரும் தவேந்திரன், பிரதீபா, மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபி, மணிமாறன், மனோரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் இலக்கியன், இலக்கியா, நிகேதன், தினேஸ், சங்கீதா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்க்கிரியைகள் யாவும் (16.05.2025) வெள்ளிக்கிழமை காளிகோயிலடி குப்பிளான் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.00 மணியளவில் பூதவுடல் குப்பிளான் கடாகடம்பை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
மகன் - தவேந்திரன் (கனடா)
0016478551714

## மரண அறிவித்தல்

வையக வாழ்வு 15 . 02 . 1932



விண்ணக வாழ்வு 15 . 05 . 2025

### திருமதி கார்த்திகேசு மகேஸ்வரி

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், 202/2 நாவலர் வீதி யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு மகேஸ்வரி அவர்கள் நேற்று (15.05.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் விக்கினேஸ்வரன், கமலாவதி, நிர்மலேஸ்வரன் (ரஜனி ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), சிவனேஸ் (ஜேர்மனி), சற்குணவதி (ஆசிரியை-யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), ஜெயாமதி (அவுஸ்ரேலியா), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரி, சுப்பிரமணியம் (தொழிநுட்பவியலாளர்), ரஜனி, இளங்கோ, தனலக்ஷ்மி, அர்சுனன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, கனகரத்தினம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். டாழினி (லண்டன்), யாழினி (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி-விவசாய நிறுவகம்), கனுஷா (முகாமைத்துவ உதவியாளர், கமநலத் திணைக்களம்), அருணன் (மருத்துவபீட மாணவன், அவுஸ்ரேலியா), கம்சிகன், தனுஷ்கா, மயூரன் (மின்சாரசபை-யாழ்ப்பாணம்) சதீஸ்குமார் (வங்கி ஊழியர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருத்திக்கின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

202/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 515 4110
077 692 1136



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.